# யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி

## பரிசளிப்பு விழா - 2014

**தலைவர்**

**திரு.மு.கனகலிங்கம்**

(அதிபர்)

**பிரதம விருந்தினர்**

**திருவாளர் செ.உதயகுமார்**

(மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)

# J/Vigneswara College, Karaveddy

## ANNUAL PRIZE GIVING DAY – 2014

**PRESIDENT**

**Mr.M.Kanagalingam**

(Principal)

**CHIEF GUEST**

**Mr.S.Uthayakumar**

(Provincial Director of Education, Northern Province)

**மகுட வாசகம்**

உண்மை வெல்லும்

**கல்லூரியின் பணிக்கூற்று**

எம்மை நாடிவரும் மாணவர் சமுதாயத்தை உள்வாங்கி அவர்களது தேர்ச்சிகளை மேலும் விருத்தி செய்தல்.

**கல்லூரியின் தொலைநோக்கு**

மாறிவரும் உலகுக்கு ஏற்ப மாற்றங்களை உள்வாங்கி அதனை எதிர்கொள்ளக்கூடிய மாணவர் சமுதாயத்தை தோற்றுவித்தல்.

************************

# விக்னேஸ்வரக் கல்லூரியின் 2014 ஆம் ஆண்டுக்கான அதிபர் அறிக்கை

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய இன்றைய முதன்மை விருந்தினரும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருமாகிய திருவாளர் செ.உதயகுமார் அவர்களே, அவர்தம் துணைவியார் அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருக்கும் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு சி.நந்தகுமார் அவர்களே, வணக்கத்திற்குரிய குருமார்களே, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே, உதவிக் கல்விப் பணிப்பாளர்களே, கோட்டக்கல்விப் பணிப்பாளர்களே, ஆசிரிய ஆலோசகர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பழைய மாணவர் சங்க தலைவர் அவர்களே, செயலாளர் அவர்களே, உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் அவர்களே, உறுப்பினர்களே, முன்னாள் அதிபர்களே, ஆசிரியர்களே, கல்விசாரா ஊழியர்களே, அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கங்கள்.

வடமராட்சி வலயத்தில் முன்னணிப்பாடசாலைக1ளில் ஒன்றாக விளங்கும் எமது கல்லூரியானது "இசுறு" பாடசாலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு தற்போது ஆயிரம் பாடசாலைத்திட்டத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. எமது கல்லூரி மரபுக்கமைய கல்லூரி அதிபர் என்ற வகையில் 2014ஆம் ஆண்டுக்குரிய பரிசளிப்பு விழா அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த 2014 ஆம் ஆண்டு கல்லூரியின் வரலாற்றில் முக்கியமான காலமாகும். 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இசுறு கட்டிட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு நிர்வாகக் கட்டிடத்தொகுதி மத்திய கல்வி அமைச்சர், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் இருவரும் இணைந்து கட்டிடங்களை திறந்து வைத்தனர். சுமார் மூன்றரைக்கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டிடங்கள் மாணவர்களுக்கு பெரும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. எதிர்வரும் 2017ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆறாந்திகதி எமது கல்லூரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது. நூற்றாண்டு விழா நினைவாக கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தை நவீனப்படுத்தி தியான மண்டபமாக அழகும் அமைதியும் பொலியும் இடமாக மாற்றியமைத்தால் பண்பு விருத்தியை மேம்படுத்தி கல்வியில் ஈடுபாடு கொள்ளச் செய்ய முடியும். இந்த வேலைத்திட்டத்தை பழைய மாண்வர் சங்கம் முன்னெடுத்துச் செயற்படுமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன். அவ்வாறமைந்தால் அம்மண்டபம் நூற்றாண்டு விழா ஞாபகார்த்த மண்டபமாக அமையும்.

இவ்வாண்டு சித்திரை மாதம் முதலாம் திகதி இக்கல்லூரியின் புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடம் வடக்கு மாகாண் சபை உறுப்பினர்களால் திறந்து வைக்கப்பட்டது. குறித்த தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை மாணவர்கள் பயன்படுத்தி பயன்பெற்று வருகிறார்கள்.

கடந்த ஆண்டு எமது கல்லூரியில் இருந்து இரண்டு மாணவர்கள் பொறியியல் துறைக்கும், ஒருவர் முகாமைத்துவ துறைக்கும், ஒருவர் சித்தமருத்துவத்துறைக்கும், ஏழு பேர் கலைத்துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களை இச்சந்தர்ப்பத்தில்

வாழ்த்துவதோடு அவர்களைக் கற்பித்து நெறிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். பிரபல பாடசாலைகளுடன் ஒப்பிடுமிடத்து எமது மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் இப் பல்கலைக் கழக அனுமதியானது உயர்வான வீதாசாரத்தையே காட்டி நிற்கின்றது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். மேலும் அண்மையில் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் (NSF) நடாத்தப்பட்ட விஞ்ஞான குறுநாடகப் போட்டியின் முதலாம் சுற்றில் எமது மாணவர்கள் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். தொடர்ந்து இடம்பெற இருக்கும் இறுதிச்சுற்றிலும் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் சாதனை படைக்க வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் மாணவர்களையும் பொறுப்பாசிரியர்களையும் மனதார வாழ்த்துகிறேன்.

மேலும் எமது கல்லூரிக்கு பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளால் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் மற்றும் தேவைகளுக்குமென உதவிகள் கிடைத்துள்ளன. அவற்றை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிப்பது பொருத்தமானதாகும்.

1. மாணவர்களின் ஆங்கில பேச்சுத்திறனை அபிவிருத்தி செய்வதற்கான நிதியம்

| | |
|---|---|
| • தொழிலதிபர் ரஜீவ் தர்மேந்திரா | ரூபா 100000 |
| • திரு.சுரேன் பெர்னான்டோ | ரூபா 100000 |
| • திரு.மு.சிவகணநாதன் | ரூபா 135000 |
| • Silveta (PVT) Ltd. | ரூபா 100000 |
| | ரூபா 435000 |

இத்திட்டம் உரியமுறையில் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2. வெளிநாட்டில் வதியும் பழையமாணவர் திரு.சு.சதீஸ்கரன் இப்பிரதான மண்டபத்திற்கான ஒலிபெருக்கி சாதனங்களை வழங்கி உதவியுள்ளார். ரூபா 80000.
3. திரு.ம.ஜெயசிம்மன் ரூபா 10000 பெறுமதியான பூக்கன்றுகள் அன்பளிப்பு.
4. நிர்வாகக் கட்டிடத் திறப்புவிழாவிற்கென பழைய மாணவர் சங்கத்தினரின் அன்பளிப்பு ரூபா 50000
5. ஓய்வு பெற்ற மாகாணக்கல்விப் பணிப்பாளரும் பழையமாணவருமாகிய திரு.வ.செல்வராஜா அவர்களின் மணிவிழா ஞாபகார்த்த அன்பளிப்பு கண்ணாடி அலுமாரி ரூபா 15000.
6. திரு.செ.தவராஜா (அவுஸ்திரேலியா) இரு மொழிமூல கற்கைக்கான நிதி உதவி ரூபா 25000.
7. திரு.சி.பொன்னம்பலம் இல்ல மெய்வன்மைப் போட்டிக்கான அன்பளிப்பு ரூபா 20000.
8. பேராசிரியர் மு.சிவபாலன் (USA) TV, Multimedia projector ரூபா 175000
9. திரு.சி.குகநேசன் (சுவீடன்) ரூபா 10000

10. செல்வி பி.மதுஷா (விரிவுரையாளர் மொறட்டுவ பல்கலைக்கழகம் ) ரூபா10000
11. திரு.ந.கணேஸ்குமார் (சுவிற்சலாந்து) ரூபா10000
12. திரு.வ.ஆ.தங்கமயில் நூலகத்திற்கான பெறுமதிமிக்க 11 நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவர்கள் எல்லோருக்கும் அதிபர் என்ற வகையில் எனது மனமார்ந்த நன்றிகளை கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மத்திய கல்வி அமைச்சின் நிதி அனுசரணையுடன் கல்லூரியில் கல்வி கற்று அர்ப்பணிப்புடன் உதவிய பழையமாணவர்களுக்கு **"விக்நேயன்"** என்ற விருது வழங்கி கௌரவிக்கும் விழா இவ்வாண்டு நடாத்தப்பட்டமை கல்லூரி வரலாற்றில் முக்கியமான விடயமாகும்.

எமது கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகவும், பிரதிஅதிபராகவும் சிறப்பாக கடமையாற்றும் திருவாளர் ம.அ.தவரத்னராஜா அவர்களுக்கு மத்திய கல்வி அமைச்சால் வழங்கப்படும் சிறந்த ஆசிரியருக்கான "பிரதிபா பிரபா" விருது 2015 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றுள்ளது. பிரதி அதிபரின் சேவையைப் பாராட்டுவதோடு அவர் நீடூழி நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

தற்கால சமூகத்தில் யுத்தம் காரணமாகவும் மற்றும் சமூகக் காரணிகள் காரணமாகவும் பிரிவுற்ற, பிளவுற்ற குடும்பங்கள் தோன்றி வருகின்றன. எமது கல்லூரியில் கல்வி கற்கும் மாணவரில் 60 மாணவருக்கு தந்தை இல்லாத நிலையும் 37 மாணவருக்கு தாயில்லாத நிலையும் காணப்படுவதோடு 3 மாணவருக்கு தந்தையும் தாயும் இல்லாத நிலையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு நலன் விரும்பிகள் குறிப்பிட்ட சில உதவிகளை செய்து வருகின்றார்கள். இவ்வாறான உதவிகளை மேலும் பலர் முன்வந்து உதவினால் அது அவர்களுக்கு பேருதவியாக இருக்கும்.

நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் எங்கள் கல்லூரியின் ஸ்தாபகர், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள் ஆகியோர் கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரும் அர்ப்பணிப்புடன் தொண்டாற்றியமையை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் செயற்படுத்துவதற்கு இந்த நன்நாளில் நாம் எல்லோரும் உறுதி பூணுவோமாக.

பரிசளிப்பு விழாவைக் கொண்டாடும் இந்தச் சபையிலே 2014ஆம் ஆண்டுக்குரிய செயற்பாடுகளையும், பௌதிகவள, மனிதவள நிலைமைகளையும் குறிப்பிடுவது பொருத்தமானது என எண்ணுகின்றேன்.

**கல்லூரியின் ஆளணி விபரம் - 2014**

1. ஆசிரிய ஆளணி விபரம்

| | |
|---|---|
| விஞ்ஞானப் பட்டதாரிகள் | 08 |
| வர்த்தகப் பட்டதாரிகள் | 05 |
| கலைப் பட்டதாரிகள் | 14 |
| பயிற்றப்பட்டோர் | 16 |
| | 43 |

தேவையான ஆளணி விபரம்

| | |
|---|---|
| நாடகமும் அரங்கியலும் | 01 |
| அரசியல் விஞ்ஞானம் | 01 |
| உயிரியல் | 01 |
| வரலாறு | 01 |
| சுகாதாரத் தொழிலாளி | 01 |

2. கல்வி சாரா ஊழியர் விபரம்

| | |
|---|---|
| ஆய்வுகூட உதவியாளர் | 02 |
| நூலக உதவியாளர் | 01 |
| பாடசாலை காவலாளி | 02 |
| பாடசாலைத் தோட்டத்தொழிலாளி | 01 |
| | 06 |

3. புதிதாக இணைந்து கொண்டவர்கள்

1. திருமதி ஜெ.தவேந்திரன்
2. திருமதி பா.பிரதீபன்
3. திருமதி வா.ஞானானந்தன்
4. செல்வி த.தர்மலிங்கம்
5. திரு.சி.பாலச்சந்திரன்
6. திரு.பா.கிருஷ்ணஜோதி
7. திரு.ப.பரணீதரன்
8. திரு.த.விமலன்
9. திரு.வி.ஜெகதீசன்
10. திரு.ச.உதயநாதன்

4. இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

1. திரு ம.சசிகரன்
2. திருமதி இ.பாலகிருஷ்ணன்
3. திருமதி நி.துஷ்யந்தன்
4. திருமதி து.புனிதா

5. ஓய்வு பெற்றமை

1. திரு.ச.அ.இராசநாயகம் (அலுவலக சிறுபணியாளர்)
2. திரு.சி.கதிர்காமநாதன் (அலுவலக சிறுபணியாளர்)

**மாணவர் பரம்பல் - 2014**

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6 – 11 | 203 | 160 | 363 |
| 12 – 13 | 90 | 67 | 157 |
| மொத்தம் | 293 | 227 | 520 |

**க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை**

<u>பெறுபேற்றுப் பகுப்பாய்வு -2014</u>

| **பாடம்** | **தோற்றியோர்** | **சித்திவீதம்** |
|---|---|---|
| சைவநெறி | 65 | 94.0 |
| கிறிஸ்தவம் | 02 | 100.0 |
| தமிழ் | 67 | 82.0 |
| ஆங்கிலம் | 67 | 18.0 |
| கணிதம் | 67 | 55.0 |
| வரலாறு | 67 | 81.0 |
| விஞ்ஞானம் | 67 | 60.0 |
| வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | 16 | 100.0 |
| புவியியல் | 01 | 100.0 |
| குடியுரிமைக்கல்வி | 50 | 80.0 |
| கர்நாடகசங்கீதம் | 05 | 100.0 |
| சித்திரம் | 11 | 55.0 |
| பரதநடனம் | 08 | 100.0 |
| தமிழ் இலக்கியநயம் | 13 | 100.0 |
| நாடகமும் அரங்கியலும் | 24 | 96.0 |
| ICT | 06 | 100.0 |
| விவசாயம் | 09 | 78.0 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 52 | 96.0 |

**க.பொ.த.உயர்தரப் பரீட்சை**

<u>பெறுபேற்றுப் பகுப்பாய்வு -2014</u>

| **பாடம்** | **தோற்றியோர்** | **சித்திவீதம்** |
|---|---|---|
| பௌதிகவியல் | 12 | 66.6 |
| இரசாயனவியல் | 12 | 83.3 |
| இணைந்தகணிதம் | 07 | 43.0 |
| உயிரியல் | 05 | 80.0 |
| கணக்கீடு | 24 | 62.5 |
| வணிகக்கல்வி | 24 | 66.6 |
| பொருளியல் | 25 | 76.0 |
| தமிழ் | 23 | 73.9 |
| புவியியல் | 05 | 100.0 |

| | | |
|---|---|---|
| அளவையியல் | 12 | 50.0 |
| இந்துநாகரிகம் | 12 | 91.6 |
| கர்நாடகசங்கீதம் | 02 | 100.0 |
| சித்திரம் | 01 | 100.0 |
| பரதநடனம் | 02 | 100.0 |
| அரசியல் விஞ்ஞானம் | 04 | 50.0 |
| வரலாறு | 07 | 100.0 |

**பல்கலைக்கழக அனுமதி – 2014**

| துறை | தோற்றியோர் | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்றோர் |
|---|---|---|
| கணிதம் | 07 | 03 |
| விஞ்ஞானம் | 05 | 03 |
| வர்த்தகம் | 24 | 14 |
| கலை | 23 | 14 |

**2014 ஆம் ஆண்டின் சிறந்த பெறுபேறுகள்**

1. க.பொ.த.(சா/த)தரம்

| | |
|---|---|
| 1. K.தயானி | 8A , B |
| 2. S.தேனுகாசினி | 8A , S |
| 3. M.கவியரசன் | 6A , 2B, C |
| 4. A.ராஜ்மேனன் | 6A , 2B, S |
| 5. S.கேமதர்சன் | 6A , 2B, S |
| 6. E.ராஜேஸ்வரன் | 6A , B,C, S |
| 7. S.நிதர்சனா | 5A , 3B, S |
| 8. S.சபரீசன் | 5A , 2B,C |
| 9. N.நிஷாங்கன் | 4A , 3B,1C, 1S |
| 10.T.வேணுகானன் | 4A , 2B, 2C |
| 11.J.ரெமின்டன் | 4A , B, 2C, S |

2. க.பொ.த.உயர்தரம்

கணிதத்துறை

| | | |
|---|---|---|
| 1. | EASAN THARSINI | A , 2B |
| 2. | NEMAVARATHAN NISHANTHAN | B , 2C |

விஞ்ஞானத்துறை

| | | |
|---|---|---|
| 1. | SIVAMOORTHY SAKTHY | A , 2B |
| 2. | RAJESWARAN ABARNAN | 2B , C |

கலைத்துறை

| | | |
|---|---|---|
| 1. | BALENTHIRAN RAMMIYA | 2A , B |
| 2. | JEYARUPAN SUKEERTHAN | 2A , B |
| 3. | MAKATHEVAR THUVARAKA | A , 2B |

வணிகத்துறை

| | | |
|---|---|---|
| 1. | RAVEENTHIRA BAVATHARANI | 2A , C |
| 2. | THANEESWARAN KAJEEPAN | 2B , C |
| 3. | KURUSAMY AJINTHA | 2B , C |
| 4. | KUNARATHNAM MATHUSAN | 2B , C |

**எமது கல்லூரியில் இயங்குகின்ற மன்றங்கள், கழகங்கள்**

| மன்றம் / கழகம் | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|
| 1. உயர்தர விஞ்ஞான மன்றம் | திருமதி க.குமரன்<br>திரு பா.உதயராஜன் |
| 2. உயர்தர வணிக மன்றம் | திருமதி அ.மோகனராசா<br>திரு வே.பகீரதன் |
| 3. உயர்தர தமிழ் மன்றம் | திருமதி ர.சிறிகண்ணன் |
| 4. உயர்தர மாணவர் மன்றம் | திருமதி க. குகானந்தன்<br>திருமதி க.தெய்வேந்திரராஜா<br>திரு த.விஜயசங்கர். |
| 5. இந்துமாமன்றம் | திருமதி இ.அபிராமசர்மா<br>திரு கோ.கோணரஞ்சன்<br>செல்வி இ.இராசையா |

| | |
|---|---|
| 6. கிறிஸ்தவ மன்றம் | திருமதி ஆ.மே.ஜெ.நாகராசா |
| 7. ஆங்கில மன்றம் | திருமதி சா.சிறீகிருஸ்ணன்<br>திருமதி பா.பிரதீபன்<br>திருமதி ரா.ரகுமாறன் |
| 8. விஞ்ஞானமன்றம் | திருமதி சு.கிருஸ்ணதாசன்<br>திருமதி ஜ.ரவீந்திரன்<br>திரு பா.உமாகரன்<br>திருமதி தே.இந்திராஜ் |
| 9. தமிழ்மன்றம் | திருமதி ப.ஸ்ரீவேல்முருகராசா<br>திருமதி செ.விநாயகமூர்த்தி |
| 10. விவசாயக் கழகம் | திரு சி.பாலச்சந்திரன் |
| 11. இயற்கை அவதானிப்புக் கழகம் | திருமதி க.குமரன்<br>திரு பா.உமாகரன் |
| 12. கணனிக் கழகம் | திருமதி ரா.வாசுதேவன் |
| 13. சமூகவிஞ்ஞான மன்றம் | திரு அ.பவானந்தன்<br>திருமதி ம.ரவிச்சந்திரன் |
| 14. அழகியல் மன்றம் | திருமதி கு.முகுந்தராஜ்<br>திருமதி ஜெ.செல்வமோகன் |
| 15. விளையாட்டுக் கழகம் | திரு சி.கௌசிகன் |
| 16. சாரணியம் | திருமதி ர.சிவசபேசன்<br>திரு அ.பவானந்தன்<br>செல்வி ர.வைகுந்தவாசன் |
| 17. சுகாதாரக் கழகம் | திரு சி.கௌசிகன்<br>திருமதி ஜ.ரவீந்திரன் |
| 18. MOTHER SRILANKA | திரு கோ.கோணரஞ்சன்<br>திருமதி தே.இந்திராஜ்<br>திருமதி ஜ.ரவீந்திரன் |

மேற்படி மன்றச் செயற்பாடுகள் அவற்றிற்குரிய பொறுப்பாசிரியர்களினால் மாணவர்களின் ஆளுமைவிருத்தி, தலைமைத்துவப்பண்பு, சிந்தனையாற்றல், ஆக்கத்திறன் ஆகியவற்றை வளர்த்தெடுக்குமுகமாக சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுதற்குரியது.

**<u>ஆசிரியர் ஊழியர் நலன்புரிச்சங்கம்</u>**

தலைவர் திரு சி.கௌசிகன்

செயலாளர் திரு பா.உதயராஜன்

எமது ஆசிரியர் ஊழியர் நலன்புரிச்சங்கமானது கல்லூரி நலனில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. ஆசிரியர் நலன்களைப் பேணி இன்ப துன்பங்களில் பங்கேற்பதுடன் கல்லூரி சிற்றுண்டிச்சாலையை நடாத்தி கிடைக்கும் இலாபம் பாடசாலை அபிவிருத்திக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

தலைவர் திரு மு.கனகலிங்கம் (அதிபர்)
செயலாளர் திரு S.N.கதிர்வேலு (பெற்றோர்)
பொருளாளர் திரு தி.கிரிதரன் (ஆசிரியர்)

இச்சங்கம் பாடசாலையின் பௌதீக வள தேவையைப் பூர்த்தி செய்வதிலும் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்து வருகின்றது. அந்த வகையில் மாதாந்த தொலைபேசிக் கட்டணம், மின்கட்டணம் என்பவற்றுக்கான மேலதிக செலவினங்களை வழங்கி உதவுகின்றது. மேலும் வருடந்தோறும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியர் தினத்தை விமரிசையாகக் கொண்டாடி பெருமைப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

**<u>பழைய மாணவர் சங்கம்</u>**

தலைவர் திரு S.செல்வரட்ணம்

செயலாளர் திரு கி.ரவிகுமார்

பொருளாளர் திரு இ.உதயகுமார்

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகின்றமை பாராட்டுதற்குரியது. புலமைப் பரிசில் நிதியங்களை உருவாக்கி, அதன் மூலம் மாணவர்களின் கல்விச்செயற்பாடுகளுக்கும் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மேற்படி சங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்டு வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதியங்கள் பின்வருமாறு.

| பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம் | ரூபா |
|---|---|
| தொழிலதிபர் ந.பாஸ்கரன் (மருத்துவம்) | 100000.00 |
| அமரர் க.சிவபாதசுந்தரம் (உயிரியல் விஞ்ஞானம்) | 100000.00 |
| அமரர் வ.சிவஞானம் (கலை) | 100000.00 |

| | |
|---|---|
| அமரர் ஆ.சுப்பிரமணியம் (ஆர்ட்டிஸ்ற் சேர்) நுண்கலை | 100000.00 |
| அமரர் வெ.சபாநாயகம் (வறுமை நிலை) | 100000.00 |
| அமரர் க.தணிகாசலம் (முகாமைத்துவம்) | 100000.00 |
| பொது நிதியம் (ஏனையதுறை) | 300000.00 |
| அமரர் சிவசுந்தரலிங்கம் கெங்காதரன் நினைவுப்புலமைப் பரிசில் 2008 இலிருந்து (பல்கலைக்கழகம் செல்லும் வசதி குறைந்த மாணவர்களுக்கானது) | 15000.00 |
| அமரர் கி.சுப்பிரமணியம் ஞாபகார்த்தம் (கணனி விஞ்ஞானம்) | 100000.00 |
| அமரர் ந.சுந்தரமூர்த்தி ஞாபகார்த்தம் | 100000.00 |

**வள அபிவிருத்தி நிதியம்**

| | |
|---|---|
| அமரர் நா.ஆழ்வாப்பிள்ளை ஞாபகார்த்தம் | 108667.37 |
| பழைய மாணவர் லண்டன் | 45800.00 |
| அமரர் ஆ.சுப்பிரமணியம் ஞாபகார்த்தம் | 200000.00 |
| ப.மா.சங்கம் லண்டன் கிளை | 400000.00 |
| ப.மா.சங்கம் கனடா கிளை | 416000.00 |
| திரு செ.சத்தியமூர்த்தி | 55750.00 |

**பரிசில் வழங்கல் நிதியம்**

| | |
|---|---|
| அமரர் குவிதா சிவசுதன் ஞாபகார்த்தம் | 100000.00 |
| அமரர் கி.ராஜ்குமார் ஞாபகார்த்தம் | 100000.00 |

(கனடா வாழ் அவரது நண்பர்கள் மூலம் மிகவும் வசதி குறைந்த க.பொ.த(சா/த) மாணவருக்கானது)

வருடாந்தம் கல்வியில் சிறப்பாக செயற்படும் மாணவர் ஒருவருக்கும் விளையாட்டில் சிறப்பாக செயற்படும் மாணவர் ஒருவருக்குமான கௌரவிப்பு நிதியம் (2012ஆம் ஆண்டிலிருந்து)

1. Dr.S.V.தேவேந்திரா – Excellence in Sports — 150000.00
   (தந்தையார் அமரர் சின்னத்தம்பி வேலாயுதம் ஞாபகார்த்தம்)
2. திரு K.ரஜீவ் தர்மேந்திரா - Excellence in Academic — 150000.00
   (தாயார் அமரர் கௌரி மனோகரி குலவரதராஜா ஞாபகார்த்தம்)

அமரர் கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதியம் (பொறியியல் துறை) 220000.00

நிதி வழங்குனர் திருமதி இரத்தினம் கணபதிப்பிள்ளை (பழைய மாணவி, முன்னாள் ஆசிரியை)

**புதிதாக ஏற்படுத்தப்பட்ட நிதியங்கள் :**

1. அமரர் சித்தர் சின்னத்துரை ஞாபகார்த்த நிதியம் 100000.00
   வழங்குனர் அமரரின் மகனும் பழையமாணவருமாகிய திரு.சி.விஜயகுமார் விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்
2. அமரர் கனகசபை கதிர்காமத்தம்பி ஞாபகார்த்த நிதியம் 100000.00
   வழங்குனர் அமரரின் பேரனும் பழையமாணவருமாகிய Dr.M.பாஸ்கரன்
3. துன்னாலை மத்தியைச் சேர்ந்த அமரர் ஆறுமுகம் நடராசா (பொறியியலாளர், பழையமாணவர்) ஞாபகார்த்த நிதி உதவுகை (வருடாந்தம்) 8000.00
   வழங்குனர் திரு வேலுப்பிள்ளை சிவசிதம்பரம் முன்னாள் அதிபர்
4. அமரர் பொன்கணேசன் (முன்னாள் அதிபர்) ஞாபகார்த்த நிதியம் 100000.00
   வழங்குனர் அமரரின் புத்திரியும் அவுஸ்திரேலியா வாழ் பழையமாணவியுமான செளந்தரி கணேசன்.
5. பழைய மாணவர் சங்க பொதுநிதியம் 500000.00

**வருடாந்த விளையாட்டுப்போட்டிக்கான வெற்றிக் கிண்ண அன்பளிப்புகளும் கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும்**

1. பழையமாணவர் கா.கந்தப்பு ஞாபகார்த்தமாக திருமதி சி.கந்தப்பு Winner கிண்ண அன்பளிப்பு
2. N.S.Sir ஞாபகார்த்தமாக திரு கா.இரத்தினசபாபதி (பழைய மாணவர்) Runner up கிண்ண அன்பளிப்பு
3. திரு.க.இரகுபதி பழையமாணவர் (பிரான்ஸ்) – மெய்வல்லுனர் போட்டிக்கான வெற்றிக் கிண்ணங்கள்)
4. அமரர் செ.கோபிநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண அன்பளிப்பு அவரது பாடசாலை நண்பர்களால் வழங்கப்படுகிறது.
5. அமரர் நாகநாதன் கந்தசாமி ஞாபகார்த்தமாக அவரது மகன் க.ஜெயக்குமார் மெய்வல்லுனர் வெற்றிக்கிண்ணங்கள் அன்பளிப்பு
6. அவுஸ்திரேலியாவாழ் பழையமாணவர் S.சத்தியமூர்த்தி அவர்களால் தொண்டர் ஆசிரியர் வேதனம்

7. பழையமாணவர் திரு.S.செல்வரட்ணம் அவர்களின் வேண்டுகோளின் பேரில் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் திரு.ஜெயராஜா ரமணன் தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு நிதி
8. பழையமாணவர் திரு S.செல்வரட்ணம் தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவுக்கான உதவி வழங்கல்
9. செல்வி.செ.கு.ஆன்தர்சிகா க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் வசதி குறைந்தமாணவர் இருவருக்கான மாதாந்த நிதி உதவுகை ரூபா2000.
10. தொழிலதிபர் ந.பாஸ்கரன் மாதாந்தம் தலா ரூபா 100 படி 20 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி ரூபா 2000.

**ஏனைய வருடாந்த உதவுகைகள்:**

- விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்
- விளையாட்டுப் போட்டி வெற்றிக்கிண்ணம் வழங்கல்
- விளையாட்டுத் துறைக்கான நிதி உதவுகை
- தொண்டர் ஆசிரியர் வேதனம் வழங்கல், இரவுக்காவலாளிக் கொடுப்பனவு.
- நூலகநூல் அன்பளிப்பு
- ஆசிரியர் தினவிழா
- பரிசளிப்பு விழா
- முன்னாள் அதிபர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தல்
- ஓய்வு பெற்ற சிற்றூழியருக்கான கௌரவிப்பு
- வளஅபிவிருத்தி

மேலே கூறப்பட்ட நிதி உதவிகளை உரிய காலத்தில் தந்துதவி எமது பாடசாலை வளர்ச்சிக்கு என்றும் உதவும் எமது பழைய மாணவர் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், ஏனைய சகல உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது பாடசாலையில் இருந்து இசுறு திட்டத்திற்கமைய வேறாக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டு முதல் தனியாக இயங்கி வரும் விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலைக்கென பழைய மாணவர் சங்கம் இல்லாத போதிலும் அதற்கான தேவைகளையும் வள அபிவிருத்திக்கான உதவிகளையும் எமது கல்லூரியின் பழையமாணவர் சங்கமே வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கொழும்பு பழையமாணவர் சங்கம்**

திரு.S.விமலராஜா அவர்களை தலைவராகக் கொண்டு செயற்படும் இச்சங்கம் கல்லூரியின் தேவை அறிந்து உடனுக்குடன் உதவும் சங்கமாக உள்ளது. இச்சங்கம் ரூபா400000 ஐ வங்கி வைப்பிலிட்டு அதன் வட்டியை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கி எமது கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுவது போற்றுதற்குரியதாகும்.

**இலண்டன் பழையமாணவர் சங்கம்**

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் அவர்களதும் இலண்டன் வாழ் எமது பழையமாணவர்களதும் முயற்சியால் 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் வருடந்தோறும் கலை விழாக்களை நடாத்தி அதில் சேகரிக்கும் பணத்தினை கல்லூரி வளர்ச்சிக்காக அனுப்பி வைப்பது போற்றுதற்குரியது. மேலும் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களில் வசதிகுறைந்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் கல்லூரி மாதாவைப் பெருமைப்படுத்தும் வகையில் "விக்னேஸ்வரம்" சஞ்சிகை வெளியிடுவது பாராட்டத்தக்கது.

**கனடா பழையமாணவர் சங்கம்**

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் பழையமாணவருமான திரு.சி.அம்பிகாவரன் அவர்களதும், கனடா வாழ் எமது பழையமாணவர்களதும் முயற்சியால் 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் எமது மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவும் வகையில் ரூபா 416000 ஐ வள அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பி உதவியமை போற்றுதற்குரியது.

இறுதியாக எமது கல்லூரி பல வளங்களையும் பெற்று வடமராட்சி வலயத்தில் வளம் நிறைந்த பாடசாலையாக அழகுற அமைய வழிவகுத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி நிறைவு செய்கின்றேன்.

**பழைய மாணவர் சங்கத்தினால் மாவட்ட மட்டம் , மாகாண மட்டம், தேசிய மட்டம் ரீதியாக சாதனை படைத்த மாணவர்களுக்காக வழங்கப்படும் பரிசில்கள்**

1. **மாகாண மட்டம்**

   K.காதம்பரி – தமிழ் தினப்போட்டி, பாவோதல் 3ம் இடம்

2. **மாவட்ட மட்டம்**

   கிரிக்கெட் 19 வயது ஆண்கள் 2ம் இடம்

   B.சஞ்சீபன்
   V.விஜேந்திரன்
   K.திருமால்
   E.பாபு
   N.புருசோத்தமன்
   L.பிரியதர்சன்
   G.அருண்ராம்
   K.திலக்ஷன்
   S.சுயானந்
   T.அருட்குமரன்
   P.வனிதன்
   K.நிதுர்சன்
   P.சம்பந்தன்
   R.வினோஜன்
   B.வாரீசன்

**க.பொ.த சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்களுக்கு பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்படும் பரிசில்கள்**

| | |
|---|---|
| 1. K.தயானி | 8A , B |
| 2. S.தேனுகாசினி | 8A , S |
| 3. M.கவியரசன் | 6A , 2B, C |
| 4. A.ராஜ்மேனன் | 6A , 2B, S |
| 5. S.கேமதர்சன் | 6A , 2B, S |
| 6. E,ராஜேஸ்வரன் | 6A , B,C, S |
| 7. S.,நிதர்சனா | 5A , 3B, S |
| 8. S.சபரீசன் | 5A , 2B,C |
| 9. N.நிஷாங்கன் | 4A , 3B,1C, 1S |
| 10.T.வேணுகானன் | 4A , 2B, 2C |
| 11.J.ரெமின்டன் | 4A , B, 2C, S |

**பழைய மாணவர் சங்கத்தினால் சிறப்புப் புலமைப்பரிசில் பெறும் பல்கலைக்கழக மாணவர் விபரம்**

1. தொழில்அதிபர் திரு.ந.பாஸ்கரன் அவர்களால் வழங்கப்படும் புலமைப்பரிசு

   செல்வி கந்தசாமி எழிலரசி (பொறியியல்)

2. அமரர் வ.சிவஞானம் ஞாபகார்த்த புலமைப்பரிசு

   செல்வி.தவராசா சிந்துஜா (கலைத்துறை)

3. அமரர் ஆ.சுப்பிரமணியம் ஞாபகார்த்த புலமைப்பரிசு

   செல்வி.நவரத்தினம் சுனித்தா (நுண்கலைத்துறை)

4. அமரர் வெ.சபாநாயகம் ஞாபகார்த்த புலமைப்பரிசு

   செல்வி.நல்லதம்பி அருணிகா (கலைத்துறை)

5. அமரர் சி.கெங்காதரன் ஞாபகார்த்த புலமைப்பரிசு

   செல்வி.தர்மரத்தினம் செவ்வந்தி (நுண்கலைத்துறை)

6. அமரர் தணிகாசலம் ஞாபகார்த்த புலமைப்பரிசு

   செல்வன் அன்ரனி இராசநாயகம் அன்ரன் தேவகமால் ( முகாமைத்துவம்)

7. அமரர் கி.சுப்பிரமணியம் ஞாபகார்த்த புலமைப்பரிசு

   செல்வி.நற்குணம் லச்ஷிகா ( கலைத்துறை)

8. அமரர் க.இராமச்சந்திரன் ஞாபகார்த்த புலமைப்பரிசு

   செல்வன் .திருநாவுக்கரசு கஜகரன் (பொறியியல்)

9. அமரர் ந.சுந்தரமூர்த்தி ஞாபகார்த்த புலமைப்பரிசு

   செல்வி. நல்லதம்பி தேனுகா (கலைத்துறை)

10. அமரர் க.சிவபாதசுந்தரம் ஞாபகார்த்த புலமைப்பரிசு

    செல்வன் பாலேந்திரன் சுமந்தன் (சித்தமருத்துவத்துறை)

11. துன்னாலை மத்தியைச் சேர்ந்த அமரர் ஆறுமுகம் நடராசா (பொறியியலாளர் ப.மா) ஞாபகார்த்த புலமைப்பரிசு.

    வழங்குனர்: திரு.வேலுப்பிள்ளை சிவசிதம்பரம் முன்னாள் அதிபர்

    செல்வி திருச்செல்வராசா பிரேமிலா (H.N.D.E. Civil)

12. அமரர் கிருஸ்ணபிள்ளை ராஜ்குமார் ஞாபகார்த்த புலமைப்பரிசு.

(க.பொ.த சாதாரண தர்த்திற்குரியது)

செல்வி கதிர்வேலு தயானி

செல்வி. ஸ்ரீவேல்முருகராசா தேனுகாசினி

செல்வன் .மகேந்திரன் கவியரசன்

13. அமரர் குவிதா சிவசுதன் ஞாபகார்த்த புலமைப்பரிசு.

கனிஷ்ட பிரிவின் சிறந்த மாணவன் செல்வன்.S.கஜலக்ஷன்

கனிஷ்ட பிரிவின் சிறந்த மாணவி செல்வி.Y.சயந்தனா

சிரேஷ்ட பிரிவின் சிறந்த மாணவன் செல்வன். V.ஜங்கரன்

சிரேஷ்ட பிரிவின் சிறந்த மாணவி செல்வி.Y.சோபித்திரியா

14. அமரர் சின்னதம்பி வேலாயுதம் ஞாபகார்த்த புலமைப்பரிசு.

Excellence in sports 2014

செல்வன்.ம.பாகீசன்

செல்வி ஈ.தர்சினி

15. அமரர் கௌரி மனோகரி குலவரதராஜா ஞாபகார்த்த புலமைப்பரிசு.

Excellence in Academic 2014

செல்வி ரவீந்திரா பவதாரணி

*******************************

## கல்லூரி கீதம்

வாழ்கவே வளர்க வாழ்கவே - வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே ஹ
கற்றெழில் பூண்டிடுவோம்
இலைமறைகாயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக்கண்டிடுவோம்
(வாழ்கவே வளர்க)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ் தன் ஊற்றிடமாகக்
திறன் பணி கண்டிடுவோம்
(வாழ்கவே வளர்க)

வர்த்தக இயலும் தொழில்முறைக்கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நர்த்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே வளர்க)

எண்ணொடு எழுத்தும் என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி
என்றதை கூறிடுவோம்.
(வாழ்கவே வளர்க)